Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 342

வெள்ளிக்கிழமை 03 நவம்பர் 2023

ஐப்பசி 17 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

மயிலத்தமடு விவகாரம்;

## தமிழ் மக்களுக்கு ஆதரவாக பல்கலை. மாணவர்கள் களம்



மட்டக்களப்பு, நவ. 3
மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் சுமார் 50 நாள் களாகத் தொடர்கின்ற நிலையில், பண்ணையாளர்களுக்கு ஆதரவாக கிழக்குப் பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் »15

## சீனிக்கு எகிறிய வரி!

கொழும்பு, நவ. 3
சீனிக்கு இதுவரை விதிக்கப்பட்டுவந்த சரக்கு வரி நேற்று சடுதியாக அதிகரிக்கப்பட்டது.
இதையடுத்து சீனிக்கு விலை நிர்ணயம் செய்யப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.
இதுவரை 25 சதமாக விதிக்கப்பட்டுவந்த வரி நேற்று 50 ரூபாவாக உயர்த்தப்பட்டது. இதனால் சீனியின் விலை உயர்த்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே சீனிக்கு உச்சபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-ம)

## பால்மா விலை ரூ. 22 குறைப்பு

கொழும்பு, நவ. 3
லங்கா சதொச நிறுவனம் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் அமுலுக்குவரும் வகையில் பால்மாவின் விலையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளது. இதன்படி, 400 கிராம் பால் மா பைக்கெற்றின் ஒன்றின் விலை 22 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய »15



கடற் பதற்றங்களுக்கு மத்தியில்

# இந்திய நிதியமைச்சர் திருகோணமலைக்கு வருகை!

திருகோணமலை, நவம்பர் 3
இலங்கைத் துறைமுகத்திலும், அதன் கடற்பரப்புகளிலும் அண்மைக்காலமாக பிராந்திய வல்லரசுகளின் போட்டியும், பதற்றமும் சூழ்ந்திருக்கும் நிலையில் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் திருகோணமலைக்கு நேற்று திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். »15

## மலையக மக்களுக்கு முழுமையான உதவி!

தமிழர்களுக்கும் நல் வளர்ச்சி
இந்திய நிதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3
மலையக மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்ற இந்திய அரசாங்கம் தயாராகவுள்ளது. இதேவேளை - தமிழர்களுக்கும் நல் வளர்ச்சி வேண்டும் என்று தெரிவித்தார் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியானதை »15

## வரியால் வதைப்பதே அரசாங்கத்தின் திட்டம்!

ஜே.வி.பி. காட்டம்

கொழும்பு, நவ. 3
பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான பொறிமுறை ரணில் - ராஜபக்ச அரசிடம் இல்லை. மாறாக மக்கள்மீது வரிச்சுமை திணிக்கப்படுகின்றது. எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் ஊடாகவும் வரி »15

## யாழ். வருகிறார் சீனத் தூதுவர்!

யாழ்., நவ. 3
இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் தலைமையிலான குழு யாழ்ப் »15

## டிசெம்பர் மாதத்துக்கு முன் வடக்கில் வீதிஅபிவிருத்தி

இராஜாங்க அமைச்சர் ஜானக தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3
டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வடக்கில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்திப் பணிகளை முற்றாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாகாண »15

40 வீதமான ஊதிய உயர்வு

## வவுனியாப் பல்கலையின் ஊழியர்கள் போராட்டம்

வவுனியா, நவ. 12
40 வீதமான ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வவுனியாப் பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். »15

இஸ்ரேல் - ஹமாஸ் மோதல்;

## ராபா எல்லை வழியாக இலங்கையர்கள் மீட்பு!

கொழும்பு, நவ. 3
இஸ்ரேல் - ஹமாஸ் மோதலையடுத்து காஸா பகுதிக்குள் சிக்குண்டிருந்த 17 இலங்கையர்களும் எகிப்தின், ராபா எல்லை வழியாக மீட்கப்பட்டுள்ளனர். போர் ஆரம்பித்த நாள்முதல் இவர்கள் காஸாவில் அகப்பட்டிருந்தனர். அவர்களை மீட்கும் நடவடிக்கைகள் எகிப்தின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த நிலையிலேயே காஸாவுடன் எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் எகிப்தின் வழியாக 17 »15

Digitized by Noolaham Foundation

# நாட்டை மீட்டெடுக்க பொதுவேலைத்திட்டம்



## உருவாக்க ஒன்றுபடுங்கள்- தயாசிறி அழைப்பு

கொழும்பு, நவ. 3

எதிரணிகளையும், சிவில் அமைப்புகளையும் ஒன்றிணைத்து பொதுவேலைத் திட்டமொன்றை உருவாக்கி நாட்டை மீட்டெடுப்பதற்கு சகலரும் ஒன்றுபடவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தற்போதைய அரசாங்கம் முறையாகச் செயற்படவில்லை. இதனால் சொல்லொணாத்துன்பங்களுக்குள் மக்கள் தள்ளப்படுகின்றனர். நாட்டை மீட்பதற்கு தற்போது பொது வேலைத்திட்டமொன்று அவசியம். எதிரணிகள் ஒன்றிணைந்து பொதுத்திட்டமொன்றை உருவாக்காவிட்டால் மக்கள் மறுபடியும் வீதிக்கு இறங்குவதைத் தடுக்க முடியாது. அதற்காக கட்சிகள், சிவில் அமைப்புகள், தொழில் வல்லுநர்கள், புத்திஜீவிகள் ஒன்றுபடவேண்டும். இந்தப் பொதுத் திட்டம் ஏற்படுவதற்கான பாலமாகச் செயற்பட நான் தயார் - என்றார். (ச-44)

## யாழ். பல்கலையினுள் மாற்றுக்கருத்துக்கு இடமளிக்கவேண்டுமாம்

### சட்டத்தரணி சுவஸ்திகா கூறுகிறார்

திருகோணமலை, நவ. 3

எனது விரிவுரையை இரத்துச்செய்யும் முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்ததன் மூலம், பல்கலைக்கழகத்துக்குள் சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்துப் பரிமாற்றத்துக்கு எதிராக ஓர் ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது என சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கத்தின் கருத்தமர்வு நடைபெற இருந்த நிலையில் மாணவர்களின் எதிர்ப்பால் அது நிறுத்தப்பட்டது. இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அவர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில், எனது விரிவுரைக்கு ஒரு நாள் முன்னதாக, நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றப் போவது தொடர்பில் மாணவர் சங்கம் அதிருப்தியை தெரிவித்திருந்தனர் என்று சட்டத்துறைத் தலைவர் என்னிடம் தெரிவித்தார். கடந்த மாதம் நான் ஆற்றிய மற்றுமொரு உரையில் விடுதலைப்புலிகளை ஒரு பாசிச அமைப்பாகக் கட்டமைத்திருந்தேன் என்பதுதான் இந்த அதிருப்திக்கான காரணம் என்று கூறினார். எப்படியிருந்தாலும், விரிவுரை திட்டமிடப்பட்டவாறே இடம்பெறும் என்று அவர் என்னிடம் கூறினார்.

விரிவுரை நடைபெறும் நாளில், பேசுவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக, நான் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் இனி நிகழ்வை நடத்துவது சாத்தியமில்லை என்று சட்டத்துறைத் தலைவர் எனக்குத் தெரிவித்தார். எனவே பல்கலைக்கழகத்துக்கு வெளியே நிகழ்வை நடத்த கலைப்பீடத்தின் பீடாதிபதி அழைப்பு விடுத்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இடத்தை மாற்றுவதற்கு நான் சம்மதிக்கமாட்டேன் என்று துறைத் தலைவரிடம் தெரிவித்தேன்.

பீடாதிபதியை நான் சந்தித்த போது பதில் துணைவேந்தரும் தானும் இந்த நிகழ்வை 'ஒத்திவைக்க' முடிவு செய்திருப்பதாகவும், 'அசௌகரியத்தை' தவிர்க்க விரும்பியதால் அவர்களால் இந் நிகழ்வை நடத்தமுடியாது என்றும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களிடம் பேசியதாகவும், எதிர்ப்பை வெளிப்படுத்த மாற்று வழிகளை அவர்களுக்கு அளித்ததாகவும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார். எனினும் இந்த நிகழ்வு தொடரக் கூடாது என்பதில் விடாப்பிடியாக இருந்தனர் என்றும் மாணவர்கள் 'தீவிர உணர்வுகளுடன்' செயற்படுவதாகவும், அவர்கள் 'முதிர்ச்சியற்ற' முறையில் நடந்துகொள்வதாகவும் அவர் கூறினார். நானும் 'அதீத உணர்ச்சிகளின்' கீழ் அறிக்கைகளை வெளியிட்டேன் என்றும், எனது முந்தைய உரையில் விடுதலைப்புலிகளை அந்த வகையில் நான் பரந்த அளவில் வர்ணித்திருக்கக் கூடாது என்றும் பீடாதிபதி கூறினார். என்னுடன் தனக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும் என்னை அழைக்க தான் முடிவு செய்ததாக அவர் கூறினார். பதிலுக்கு, ஒரு நிகழ்வைக் கூட நடத்த முடியாத நிலையில், நான் 'தீவிர உணர்ச்சிகளுடன்' பேசினேன் என எனக்கு விரிவுரை செய்யக்கூடிய ஓர் இடத்தில் அவர் இல்லை என்று நான் பீடாதிபதியிடம் கூறினேன். இந்த நிகழ்வை இரத்துச் செய்ததன் மூலம் பல்கலைக்கழக நிர்வாகம் புலிகளின் கருத்துக்கு மாறான கருத்துகளை பல்கலைக்கழகத்துக்குள் அனுமதிக்காது என்ற செய்தியை எனக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் அனுப்பியுள்ளதாக நான் மேலும் கூறினேன். பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்நகை என்று நான் மேலும் கூறினேன். நிகழ்வைத் தொடருமாறு நான் பீடாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தேன். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

பீடாதிபதி உறுதியளித்த அதே விரிவுரைத் தொடருக்கான 'ஒத்திவைக்கப்பட்ட' அழைப்புக்காக நான் காத்திருக்கிறேன். இந்த விடயத்தில் தாங்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் எனது கருத்தைப் பேசுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இடமளிப்பீர்கள் எனவும், வெவ்வேறு கருத்து நிலைப்பாடுகளை உடையவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்தத் தடையும் இல்லாமல் உரையாடல்களிலும், விவாதங்களிலும் ஈடுபடுவதற்கான கலாசாரம் ஒன்று நிலவுவதனை உறுதி செய்வீர்கள் எனவும் நம்புகின்றேன் - என்றுள்ளது. (ஒ-இ)

## கிரிக்கெட் அணி மீட்சிக்கு மோதலைக் கைவிடுங்கள்

### நாமல் அறிவுரை

கொழும்பு, நவ. 3

சிறிலங்கா கிரிக்கெட்சபையும் அரசும் தமக்கிடையிலான மோதலை கைவிட்டு வீரர்களின் பலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் நலன்கருதிச் செயற்பட வேண்டும் - இவ்வாறு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இதுதொடர்பில் கூறுகையில், கிரிக்கெட்சபை தேசத்துரோக நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் அதனால் உடன் பதவிவிலகவேண்டும் என்றும் அரசாங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

தந்தையும், தாயும் தினமும் சண்டைபிடித்துக் கொண்டால் குழந்தை முறையாக வளருமா? என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. முதலில் தாய், தந்தை சண்டை நிறுத்தப்படவேண்டும். ஊடகங்கள் மத்தியில் சென்று சொற்போரில் ஈடுபடுவதை அரசும், கிரிக்கெட் சபையும் நிறுத்தவேண்டும்.

தற்போதுள்ள இலங்கை கிரிக்கெட் அணி இளம் அணியாகும். சிறந்த வீரர்கள் உள்ளனர். வீரர்களின் உளபலத்தை கட்டியெழுப்பவேண்டும். வென்றாலும், தோல்வி அடைந்தாலும் நாம் அணியுடன் இருக்க வேண்டும் அப்போதுதான் இலங்கை கிரிக்கெட் அணி மீட்சி பெறும் - என்றார். (ச-44)

## சொத்து விவரத்தை வழங்கப் பணிப்பு!

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்த்தன ஆகியோர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சத்தியக்கடதாசிகள் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்கில் உத்தரவிடப்பட்ட நட்டஈட்டை முழுமையாக வழங்க இவர்கள் மூவரும் தவறியுள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

## வடக்கில் அதிபர் வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை

### மாகாணக் கல்விப்பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 3

வடக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் மற்றும் பிரதி அதிபர் பதவிகளுக்கு 370 பேர் நியமிக்கப்படவுள்ளனர் என்று வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் யோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கின் 13 வலயங்களிலுள்ள பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் மற்றும் பிரதி அதிபர் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

நாடளாவிய ரீதியில் அதிபர் மற்றும் பிரதி அதிபர்களுக்கான நேர்முகத்தேர்வுக்காக சுமார் 4 ஆயிரத்து 500 பேர் பங்குபற்றினர். இந்தநிலையில் சுமார் 370 பேர் வடக்கில் அதிபர் வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர் - என்றார். (ச-27)

## மொட்டுக் கட்சி 'டபிள்கேம்'

### சாடும் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு, நவ.3

சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியே, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தீ வைத்தது. அன்று ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்தவர்கள், இன்று அவருடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளனர். இதன்மூலம் மொட்டுக் கட்சியின் 'டபிள்கேம்' அம்பலமாகின்றது என்று சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பிரதான இரு கட்சிகளை இணைத்து நாட்டை முன்னேற்றுவதற்காகவே ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் என்ற திட்டத்துக்கு மைத்திரி உடன்பட்டார். புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதும் இதன் நோக்கமாக இருந்தது.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சிசெய்தபோது, ரணிலுடன் எப்படி ஆட்சி செய்வது எனக் கூறிவிட்டே கட்சியை விட்டு வெளியேறி அவர்கள் மொட்டுக் கட்சியை உருவாக்கினார்கள். சுதந்திரக் கட்சிக்குத் தீ வைத்தார்கள். கோத்தபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்சவை மக்கள் விரட்டிய பின்னர், மொட்டுக் கட்சியை பாதுகாத்துக்கொள்ள ரணிலுடன் இணைந்தனர். அன்று வேண்டாம் எனக் கூறிய ரணில் இன்று எப்படி வேண்டப்பட்டவரானார்? இதன்மூலம் மொட்டுக் கட்சியினரின் இரட்டை நிலைப்பாடு தெளிவாகின்றது - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




### இந்த ஆண்டில் மட்டும்

# வீதி விபத்துகளில் 113 சிறார்கள் சாவு!

## வீதி விபத்துகளைத் தடுக்க செயலணி உருவாக்க வலியுறுத்து

**கொழும்பு, நவ.3**

**நாட்டில் ஜனவரி முதல் இதுவரை இடம்பெற்ற வீதி விபத்துகளில் 113 சிறார்கள் உயிரிழந்துள்ளனர். விபத்துகளால் வருடாந்தம் 3 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர்.**

-இவ்வாறு வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான நிபுணத்துவக் குழுவின் தலைவர் பேராசிரியர் சமன் தர்மரத்ன தெரிவித்தார்.

கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில் நடைபெற்ற "சேவ் ரோட் சேவ் சில்ரன்" சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வீதி விபத்துகளால் உலகின் ஏதாவது ஓர் இடத்தில் 42 செக்கன்களுக்கு ஒருமுறை மரணமொன்று ஏற்படுகிறது. இருப்பினும் உயர் வருமானம் ஈட்டும் நாடுகளில் வீதி விபத்துகள் காரணமாக ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

இலங்கையில் வீதி விபத்துகள் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 113 சிறுவர் மரணங்கள் இடம்பெற்றுள்ளன. 15 தொடக்கம் 44 வயதுக்குட்பட்டவர்களே வீதி விபத்துகளில் இறக்கின்றமை அல்லது அங்கவீனமாவதை காணமுடிகிறது. அத்தோடு வருடாந்தம் 3 ஆயிரம் பேர் வீதி விபத்துகளால் உயிரிழப்பதோடு அந்த எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிப்பைக் காட்டுகிறது.

அவற்றை ஒப்பீட்டளவில் பார்க்கும்போது எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கிலான மரணங்களும், அங்கவீனமடைதலும் வீதி விபத்துகளினால் நிகழ முடியும் என்பதோடு, அதனால் பல பில்லியன் ரூபாவை நாடு இழக்க நேரிடும். இந்த நிலையை கருத்தில் கொண்டு வீதி விபத்துகளையும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் அங்கவீனம் அடைதலையும் கட்டுப்படுத்துவதற்கான செயலணியொன்றை உருவாக்க வேண்டும் - என்றார். (எ-44)

## உயிர்கொல்லி போதை கடத்தல்: பிரதான சந்தேகநபர் கைதானார்

மன்னார், நவ. 3

மன்னாரில் நீண்ட காலமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் பிரதான சந்தேகநபர் உயிர்கொல்லி போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மன்னார் தாராபுரம் கிராமத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 9 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மன்னார் பொலிஸ் பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் உயிர்கொல்லி போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

மன்னார் தாழ்வுப்பாடு பகுதியிலிருந்து தாராபுரத்துக்கு போதைப்பொருளை கொண்டு வந்த வேளையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

5 ஆயிரத்து 150 போதைப்பொருள் மாத்திரைகளுடன் 30 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் இந்த போதைப்பொருள் மாத்திரைகள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஒ-213)

## வடமாகாண பூப்பந்தாட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்!

வடக்கு மாகாண பூப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பூப்பந்தாட்டப் போட்டிகள் கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ளன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள உள்ளக அரங்கில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டிகள் தொடர்ந்து 5 நாள்கள் நடைபெறவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டச் செயலர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-113)

## சனத்தொகை கணக்கெடுப்பு வடமராட்சியில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

2024 ஆம் ஆண்டுக்கான சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்புப் பணிகள் பருத்தித்துறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பத்து வருடங்களுக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தால் நடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது இலங்கையிலுள்ள அனைத்து கட்டடங்களுக்கும் கோள அமைவிட இலக்கமொன்று (GPS) வழங்கல், கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் டிஜிற்றல் மயமாக்கப்பட்ட (Digitized) வரைபடம் வழங்கல் என்பனவும் மேற்கொள்ளப்படும்.

தரவு சேகரிப்புக்கு வழமையாக பயன்படுத்தும் அச்சிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக நவீன தொழில்நுட்பத்துடன் டெப் கணினிகள் மற்றும் இணையம் என்பன பயன்படுத்தப்படுகிறது. அத்துடன், புவி இடம்சார்ந்த தொழில்நுட்பங்களாக, கணினி உதவி தனிநபர் நேர்காணலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தநிலையில் குறித்த கணக்கெடுப்புப் பணிகள் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று குறித்த தரவுகளைத் திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ச-100)

## புதினம் தெரியுமோ?

தேவயானியும் விக்ரமும் நடிச்ச 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' எண்ட படத்தை நீங்கள் பாத்தனீங்களோ தெரியாது. அந்தப் படத்தில தேவயாயும், அவான்ர அம்மாவும் ஒருபக்கம், தகப்பன் எதிர்ப்பக்கம். தகப்பன் எதை ஆதரிக்கிறாரோ அதை தேவயானியும், தாயும் எதிர்ப்பினம், அவர் எதை எதிர்க்கிறாரோ அதை இவையள் ஆதரிப்பினம். இதைப் பாவிச்சு விக்ரம் எப்பிடி அவையின்ர வீட்டுக்க தான் நினைச்சதையெல்லாம் செய்யிறார் எண்டதுதான் படத்தின்ர கதை.

இந்தப் படத்தை எங்கட சம்பந்தன் ஐயாவும் பார்த்திருப்பார் போல கிடக்குது. ஏனெண்டால் சம்பந்தருக்கு வயசாப்போட்டுது. அவர் திருகோணமலைப் பக்கமே போறேலை, பார்லிமெண்டுக்கும் அடிக்கடி 'கட்' அடிக்கிறார் எண்டு கட்சிக்குள்ள கடும் பிரளயம். அதால சம்பந்தரை பதவியில இருந்து தூக்கிப்போட்டு அதுக்கு பொருத்தமான ஆளைப் போடவேணும் எண்டு கொஞ்சக்காலமா கட்சியின்ர பெரும்புள்ளியள் சிலரே பப்ளிக்கா கதைக்கத் தொடங்கிட்டினம். மத்திய குழுக் கூட்டத்திலகூட இதைப் பற்றி கதைப்பட்டு, கடைசியா சம்பந்தரிட்டபோய் நிலைமையை விளங்கப்படுத்தி அவரை 'பக்குவமா' கட்சியை விட்டிட்டு வீட்ட இருக்கச் சொல்றதுக்கு குழுவெல்லாம் அமைச்சவை. கட்சிக் காரருக்குத் தெரியாமலே கட்சி சார்பா முடிவுகளை எடுக்கிற சுமந்திரன் எம்.பி. அப்பவும் சம்பந்தரை பெரிசா விட்டுக் குடுக்கேலை.

ஆனால் இப்ப திடீரெண்டு சம்பந்தர் எம்.பி. பதவியை விட்டிட்டு வீட்ட போறது நல்லம் எண்டமாதிரி சுமந்திரன் கருத்துச் சொல்ல, அதுக்கு கட்சியில இருக்கிற மற்றவை 'மறுத்தான்'குடுக்க வெளிக்கிட்டிருக்கினம். தமிழரசுக் கட்சிக்காரர் மட்டுமில்லாமல் தமிழரசுக் கட்சியில இருந்து பிரிஞ்சு போனவையும், வேற கட்சிக்காரரும் கூட 'சுமந்திரன் சொல்றது பிழை. சம்பந்தரின் சேவை, தமிழர்களுக்குத் தேவை'எண்டமாதிரி அறிக்கையள், கருத்துகள் எண்டு அனல்பறக்க வைக்கினம். இப்பிடி சம்பந்தருக்காக ஆரெல்லாம் இப்ப முட்டுக் குடுக்கினமோ அவையளில முக்கால்வாசிப்பேர்தான் தமிழரசுக் கட்சிக்குள்ளையும், மத்தியகுழுக் கூட்டத்திலையும் 'சம்பந்தருக்கு வயசாகிட்டுது. அறளை பெயர்ந்து போச்சுது. அவரை உடன தூக்க வேணும்' எண்டு காவடி ஆடின ஆக்கள். அதே ஆக்கள் இப்ப சடாரெண்டு வளம் மாறி, சம்பந்தருக்கு கற்பூரச்சட்டியைத் தூக்குகினம் எண்டால் அதுக்கு ஏதும் காரணம் இருக்கவேணுமே?

அந்தக் காரணம் சரியான சிம்பிள். இப்ப தமிழரசுக் கட்சிக்குள்ள ரண்டு குரூப் இருக்கு. ஒண்டு சுமந்திரனுக்கு ஆதரவு, மற்றது எதிர்ப்பு. அதால சுமந்திரன் ஆதரிக்கிற விசயங்களை இவை எதிர்க்கிறதும், சுமந்திரன் எதிர்க்கிறதை இவை ஆதரிக்கிறதும் தான் சங்கீதக்கதிரை மாதிரி மாறி மாறி நடக்குது. இதைவைச்சுத்தான் சம்பந்தர் சுமந்திரனைக் கூப்பிட்டு 'என்னைப் பதவியில இருந்து போகச் சொல்லி கட்சிக்குள்ள கனபேர் விரும்புகினம். அதால அவையை மாத்த ஒரு வழிதான் இருக்கு. என்னை பதவியை விட்டுப் போகச் சொல்லி நீர் ஒரு கருத்தைச் சொல்லும். பிறகு பாருமன். மிச்சமுள்ள எல்லாரும் தன்ர பாட்டில எனக்கு சப்போர்ட் பண்ணுவினம்' எண்டமாதிரி ஏதும் ஐடியா குடுத்தாரோ தெரியேலையெண்டு சனம் சந்தேகப்படுகுது. ஏனெண்டால் திடீரெண்டு சுமந்திரன் ஒரேயொரு கருத்துத்தான் சம்பந்தருக்கு எதிராச் சொன்னார். அதோட இப்ப அவருக்கு எதிரா கட்சிக்குள்ள ஒருத்தரும் இல்லை. இந்த 'சம்பந்தரின் சேவை தமிழருக்குத் தேவை' எண்ட அறிக்கையளைக் காட்டியே இனிமேல் சம்பந்தர் கடைசிவரை எம்.பி. பதவியைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு இருக்கலாமே.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிட்டிய தேரரை உடன் தண்டியுங்கள்



## மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 3

**பொதுவெளியில் இனவாதக் கருத்துகளைக் கூறி, வன்முறைகளில் ஈடுபட்டும் வரும் அம்பிட்டிய சுமணரத்தினதேரர் மீது நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வரவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில் உள்ளதாவது:

'ஐ.சி.சி.பி.ஆர்.' என்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டத்தின் 3 (1) உறுப்புரையில், எந்தவொரு நபராலும் போரைத் தூண்டவோ, வேறுபடுத்தும் விதத்தில் எதிர்வாதம் புரியவோ, அல்லது வன்முறைகளில் ஈடுபடுவதோ, ஒன்று திரளுவதோ, இன, மத குரோதங்களை முன்னெடுப்பதோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் பலர் கைது செய்யப்பட்டு சிறைவாசங்கள் அனுபவிக்கின்றனர். ஆனால். வெளியில் இனவாதக் கருத்துகளை கூறியும், வன்முறைளில் ஈடுபட்டும் வரும் அம்பிட்டிய சுமணரத்தினதேரர் மீது இன்னமும் இந்தச் சட்டம் பாயவில்லை. தேரரது தாயின் கல்லறை உடைக்கப்பட்டிருந்தாலும் கூட அதுதொடர்பில் முறைப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர தமிழர்களைத் துண்டுதுண்டாக வெட்டுவேன் எனத் தேரர் கூற முடியாது. எனவே இந்தச் சட்டத்திலிருந்து அவருக்கு இனிமேலும் விலக்கு வழங்கக்கூடாது. இவரது பாரதூரமான இனவாத கருத்துகளுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன் - என்றார். (ச-44)

# அரச ஊழியர்களுக்கு 20,000 ரூபா உயர்வு!

## ஐ.ம.ச. வலியுறுத்து

கொழும்பு. நவ. 3

அரச ஊழியர்களுக்கு வரவு - செலவுத்திட்டம் ஊடாக குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். மாறாக இதுவிடயத்திலும் ஏமாற்று வித்தையை அரசு அரங்கேற்றக்கூடாது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் 14 இலட்சத்து 50 ஆயிரம் அரச ஊழியர்கள் இருக்கின்றனர். நல்லாட்சிக்காலத்தில்தான் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அதன் பின்னர் சம்பள அதிகரிப்பு இடம்பெறவில்லை. சம்பள உயர்வுகோரி அவர்கள் தற்போது வீதிக்கு இறங்கியுள்ளனர்.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, பொருளாதார சுமை உள்ளிட்ட காரணங்களால் குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வை அவர்கள் கோருகின்றனர். பொருள்கள், சேவைகளின் விலைகள் மும்மடங்கு அதிகரித்துள்ளன. மின்சாரம், சமையல் எரிவாயு, தண்ணீர், போக்குவரத்துக் கட்டணம் என அனைத்துக்குமான விலைகளும் உயர்ந்துள்ளன. அந்தவகையில் அவர்களின் கோரிக்கை நியாயமானதே. பாதீட்டில் சம்பள அதிகரிப்பு என ஜனாதிபதி கூறினாலும் அதிகரிப்பு தொகையை குறித்து அவர் குறிப்பிடவில்லை. எனவே பொய்யுரைக்காமல் அரச ஊழியர்க்ளின் நியாயமான கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்' என்றார். (ச-44)

# நான் இனவாதி அல்லன் மனக்கிலேசமே அடைந்தேன்

## அம்பிட்டிய தேரர் விளக்கம்



மட்டக்களப்பு, நவ. 3

'நான் இனவாதி அல்லன். மனக்கவலையால்தான் அன்று அப்படிக் கதைத்தேன். தமிழர்களை வெட்டுவேன் கொத்துவேன் எனக்கூறியதையிட்டு கவலை அடைகின்றேன். இந்தக் கருத்தால் தமிழ் மக்களுக்கு தாக்கம் ஏற்பட்டிருந்தால் அதையிட்டு வருந்துகிறேன் என்று சுமணரத்தினதேரர் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு. ஜயந்திபுர பகுதியில் உள்ள மயானம் கடந்த 21ஆம் திகதி இடித்தழிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனையடுத்தே நான் மயானத்துக்குச் சென்றேன். எனது தாயின் கல்லறையும் உடைக்கப்பட்டிருந்ததை அவதானித்தேன். மன உளைச்சலுக்கு உள்ளானேன். என்னை தூண்டும் வகையில் ஊடகவியலாளர்களும் செயற்பட்டனர். அப்போது என்னால் சில அறிவிப்புகள் விடுக்கப்பட்டன. அந்த கருத்துகளை பிடித்துக்கொண்டு தமிழ்க் கூட்டமைப்பின் குழுவொன்று, தமிழ் மக்களை குழப்புவதற்கு முயற்சிக்கின்றது. அப்பாவி தமிழ் மக்கள் இதனுடன் தொடர்புபடவில்லை. இதன்பின்னணியில் சில அரசியல்வாதிகளே செயற்படுகின்றனர்.

இதுதொடர்பிலான வழக்குக்காக நீதிமன்றத்துக்கு சென்றிருந்தபோது மயானம் அழிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டனர். மீள அமைத்துத்தருவதற்கு உடன்பட்டனர். மன்னிப்பும் கோரினர். நான் இனவாதி அல்லன். மனக்கவலையால்தான் அப்படி கருத்து வெளியிட்டேன். என்னுடைய கருத்தால் தமிழ் மக்களுக்குத் தாக்கம் ஏற்பட்டிருந்தால் அதனையிட்டு வருந்துகிறேன்- என்றார். (ச-44)

# யாழ்ப்பாணம் - காரைநகர் இ.போ.ச. சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 3

நீண்ட இடைவெளிக்குப் பின்னர், யாழ்ப்பாணம் காரைநகர் இடையிலான, இ.போ.ச. 785/1 வழித்தடச் சேவைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகின.

காரைநகரில் இருந்து மேற்படி வழித்தடம் வழியாக இடம்பெற்ற பேருந்துச் சேவைகள் கொவிட் பெருந்தொற்றுக் காலப்பகுதியிலும், அதன் பின்னரான நெருக்கடிகளின்போதும் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே இந்தப் பேருந்துச் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. (ம-27)

## திடீர் விபத்து முன்னாயத்தம்

# கிளி. மருத்துவமனையில் விழிப்பூட்டும் செயல்முறை



கிளிநொச்சி, நவ. 3

திடீர் விபத்துகள் ஏற்படும்போது மருத்துமனைகள் எவ்வாறு தயார் நிலையில் முன்னாயத்தமாக செயற்பட வேண்டும் என்ற செயல்முறையிலான விழிப்புணர்வுச் செயற்றிட்ட நிகழ்வு கிளிநொச்சி மருத்துவமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது இரணைமடுச் சந்தியிலிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு வாகனங்களில் நோயாளர்களை கொண்டுவருவது போன்று சித்திரிக்கப்பட்டு அவர்களுக்கு உடன் வழங்கவேண்டிய சிகிச்சைகள், மருத்துவமனையின் முன்னாயத்த நடவடிக்கை ஆகியவை தொடர்பில் செயன்முறையூடாக விழிப்பூட்டப்பட்டது. நிகழ்வுக்கு இராணுவத்தினர், பொலிஸார், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர், கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், மருத்துவர்கள், தாதியர்கள் தமது பங்களிப்பை வழங்கினர். (ச-113)

# 2 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது

இரண்டு கிலோ கஞ்சாவுடன் வவுனியாவில் வைத்து நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்குக் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று பொலிஸ் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அவரை வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இந்தியாவின் புதிய உபாயம்

இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் இருப்பவர்களை எப்போதும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இந்தியா விரும்புகின்றது. அந்த நாட்டின் பாதுகாப்புக்காக அதைச் செய்ய முற்படுகின்றது. அதற்காக எந்தவொரு எல்லைக்கும் செல்வதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது. 1980 ஆம் ஆண்டுகளில் இந்தியா, அமெரிக்காவுடன் முரண்பட்டு நின்றது. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் சார்ந்து நின்றது. இலங்கை அரசாங்கத்தை தனது காலடிக்குள் கொண்டுவரவேண்டிய தேவை இந்தியாவுக்கு எழுந்தது. இலங்கையில் கொழுந்துவிடத் தொடங்கிய இனப்பிரச்சினையை லாவகமாகப் பிடித்துக் கொண்டது இந்தியா. இலங்கையிலிருந்த தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு பயிற்சியளித்தல், ஆயுதங்கள் வழங்குதல் என்று வெளிப்படையாகவே உதவி செய்தது. இலங்கை அரசாங்கத்தை கீழ்ப்படிய வைப்பது அதன் நோக்கமாக இருந்தது. இந்தியா எதிர்பார்த்ததைப்போன்றே இலங்கை அரசாங்கமும் இந்தியாவுடன் உடன்படிக்கைக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்திய – இலங்கை உடன்படிக்கை ஊடாக இந்தியா தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு, தமிழர் தரப்பைக் கைவிட்டது.

இப்போதும் இந்தியா எவ்வளவு உதவிகளைச் செய்தாலும் இலங்கை அரசாங்கத்தை சீனாவின் நெருக்கத்திலிருந்து மீட்கமுடியவில்லை. பொருளாதார நெருக்கடி நேரத்தில் கைகொடுத்தது இந்தியா. ஆனால் இந்தியாவின் பாதுகாப்பு நலனுக்கு விரோதமாக இலங்கைக் கடற்பரப்புக்குள் சீனக் கப்பலுக்கு அனுமதி வழங்கியது இலங்கை. இலங்கை அரசாங்கம் தனது கையை மீறிச் செயற்படுவதை தொடர்ந்தும் வேடிக்கை பார்க்க இந்தியா தயாரில்லை.

அதனால் இந்தியா தனது அணுகுமுறையை மாற்றியமைத்திருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தை அடிபணியச் செய்வதற்கு தமிழர் விவகாரத்தை பகடைக்காயாகப் பயன்படுத்துவதை விடுத்து அரசாங்கத்தை ஆட்டுவிக்கும் – இயக்கும் சக்தியிடமே சரணாகதியாகப் பார்க்கின்றது இந்தியா. இதன் ஊடாக இலங்கை அரசாங்கத்தை வழிக்குக்கொண்டு வரலாம் என்று இந்தியா எண்ணுகின்றது. இந்தியா – இலங்கையுடன் கலாசார ரீதியாகப் பின்னிப் பிணைந்ததொன்றுதான் என்றாலும் எப்போதும் இல்லாதளவுக்கு இப்போது இலங்கையின் பௌத்த மத வளர்ச்சிக்காக இந்தியா விசேட கவனம் செலுத்தி நிதியுதவி வழங்கியிருக்கின்றது. இலங்கையிலுள்ள விகாரைகளுக்கு சூரிய மின்கலம் பொருத்தும் திட்டத்தையும் இந்தியா நடைமுறைப்படுத்துகின்றது. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இந்தியாவின் முதற்தர பிரமுகர் ஒருவர் இலங்கைக்கு வரும்போது மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த நிகழ்வும் அரங்கேறியிருக்கின்றது.

இலங்கையின் ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பதிலிருந்து இலங்கையின் ஆட்சியாளர்கள் என்ன செய்யவேண்டும் என்பது வரையில் பௌத்த மத பீடங்களும், மகாநாயக்கர்களுமே தீர்மானிக்கின்றனர். அந்தத் தீர்மானிக்கும் சக்தியைத் தனது வலைக்குள் வீழ்த்துவதற்கு இந்தியா முயற்சிக்கின்றது. இதன் ஊடாக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து தனக்கு வேண்டியவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது. இந்தியாவைப்பொறுத்தவரையில் தமிழர்கள் இப்போது தேவையில்லாத ஒரு தரப்பு. சிங்கள ஆட்சியாளர்களை வழிக்குக்கொண்டு வந்தால் போதும் என்று நினைக்கின்றார்கள். அதனால்தான், தமிழர்களைக் கைவிட்டுள்ளார்கள். தமிழ்த் தலைவர்கள் இனியும் இந்தியா இந்தியா என்று தூங்கிக் கொண்டிருக்காது, பூகோள அரசியலின் மாற்றத்தை ஏற்றுக்கொண்டு புதிய இராஜதந்திர தடத்தில் பயணிப்பதே புத்திசாலித்தனமானது.

**வடமாகாண மரநடுகை மாதம்** — நவம்பர் 2023

"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்."

- தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)




# கோத்தாவை விரட்டியதன் பின்னணியில் இந்தியா

## வசந்த பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 3

கோத்தாபய ராஜபக்சவை விரட்டிவிட்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிக்குக் கொண்டுவந்ததன் பின்னணியில் இந்தியா செயற்பட்டுள்ளது என்று பரபரப்பானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலர் கலாநிதி வசந்த பண்டார.

'அரகலயவின்' பின்னணியில் இந்தியாவின் றோவும், அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வுமே செயற்பட்டன எனவும் அவர் கூறினார்.

சிங்கள இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையில் நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளைகளில் இந்தியா உதவி இருந்தாலும், அதன்மூலம் தனக்கு உபாயமார்க்கமாக தேவையானவற்றை அந்நாடு பெற்றுக் கொண்டுள்ளது என்பதே உண்மை.

தமது நாட்டு இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதற்காக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இந்தியா பயன்படுத்திக்கொண்டது. பண்டைய காலத்தில் 17 தடவைகள் இலங்கையை இந்திய ஆட்சியாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர். அந்த 17 சந்தர்ப்பங்களிலும் போரிட்டு இழந்ததை இலங்கையர்கள் மீளப் பெற்றுள்ளனர். எனவே இலங்கையை காலனித்துவ நாடாக வைத்திருப்பது இலகுவான காரியம் அல்ல என்பது இந்தியர்களுக்குத் தெரியும்.

கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சி வீழ்வதற்கு இந்தியா உதவி வழங்கியது என்பது உறுதி. ஊர்ப் பகுதிகளில் வட்டி வியாபாரிபோல் பொருளாதாரத்தை விழ வைத்தே இந்தியா உதவி செய்தது. கோத்தாபய ராஜபக்சவை வெளியேற்றிவிட்டு, ரணிலை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு இந்தியா தலையிட்டதற்கான சாட்சிகள் உள்ளன.

இந்தியாவும், அமெரிக்காவும் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் செயற்படுகின்றன. 'குவாட்' அமைப்பின் தேவைதான் கோத்தாபயவை விரட்டிவிட்டு, ரணிலைக் கொண்டு வருவது. அதனைத்தான் இந்தியா செயற்படுத்தியுள்ளது. தனது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு ரணில்தான் பொருத்தமான நபர் என்பது இந்தியாவுக்குத் தெரியும். ரணிலை இந்தியா விரும்பவில்லை என்பதெல்லாம் இந்த விளையாட்டில் ஓர் அங்கமாகும். இலங்கையில் இடம்பெற்ற 'அரகலய'கூட இந்திய- அமெரிக்காவின் கூட்டு நிகழ்ச்சி நிரலாகும் - என்றார். (ஓ-44)

## நாட்டில் 217 மருந்துகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு

கொழும்பு, நவ.3

நாட்டில் தொடர்ந்தும் 217 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்று சுகாதார அமைச்சின் மேலதிகச் செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:- மருந்துத் தட்டுப்பாடு குறைந்துள்ளபோதும், வரவுள்ள மாதங்களில் தட்டுப்பாடான மருந்துகளை 100 ஆகக் குறைக்க வேண்டிய தேவை உள்ளது.

14 உயிர்காக்கும் மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்குத் தடடுப்பாடு இல்லை. தற்போது பயன்பாட்டில் உள்ள சுமார் ஆயிரத்து 300 மருந்துகளில் 383 மருந்துகள் அத்தியாவசியமானவையாகக் கருதப்படுகின்றன - என்றார். (எ-இ)

**நாளை** 04.11.2023 சனிக்கிழமை ஐப்பசி 18

சுபநேரம் : 03.04 – 04.34
ராகுகாலம் : 09.04 – 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகப்பூச்சி மாணவர்கள் தெரிவுகளில் தவறிழைப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எடுத்துரைப்பு

கிளிநொச்சி, நவ. 3

**உலகியல் அறிவோ, கூருணர்வுப் பார்வையோ, எதிர்காலம் பற்றிய தெளிவோ இல்லாது புத்தகப்பூச்சிகளாக வளர்க்கப்படும் பிள்ளைகள், உரிய வழிகாட்டல்கள் இன்மையால், பல்கலைக்கழக கற்கைநெறிகளைத் தெரிவுசெய்வதில்கூட தவறிழைக்கிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

தர்மபுரம் இல. 1அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற 65ஆவது ஆண்டு நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயர்தர மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு சற்றும் குறைவில்லாத வகையில் ஆரம்பப்பாடசாலையின் நிகழ்வு மிகநேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வின் தரம் உயர்ந்து நிற்பதற்கு பாடசாலை அதிபரின் ஆளுமையும், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் கூட்டிணைவும் தான் காரணம். இத்தகைய புறச்சூழலில் வளரும் குழந்தைகள்தான் ஆளுமையும் தலைமைத்துவமும் மிகுந்த குழந்தைகளாக உருவாகுவார்கள்.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும், கிளிநொச்சி மற்றும் திருகோணமலை வளாகங்களிலும் ஒவ்வொரு துறைகளிலும் பல்வேறு கற்கைநெறித் தெரிவுகள் உள்ளபோதும், வட, கிழக்கிலுள்ள தமிழ் மாணவர்கள் தத்தம் துறைசார்ந்த முதன்மைக் கற்கைநெறிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்கின்றனர். இதனால் ஏனைய கற்கைநெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் தவறவிடப்படுகின்றன.

இது தொடர்பிலான தெளிவையும், வழிகாட்டலையும் எமது மாணவர்களுக்கு வழங்கவேண்டிய தேவை உள்ளது. சமநேரத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலபாடத்தில் ஆகக்குறைந்தது திறமைச் சித்தியையேனும் பெற்றுக்கொள்ள மாணவர்களும், அவர்களை வழிப்படுத்துகின்ற ஆசிரியர்களும் முயற்சிக்க வேண்டும். இதன்மூலம் பல்கலைக்கழக வாய்ப்பைப்பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் - என்றார். (ஒ-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார். பணிச்சுமை அதிகரிப்பதால் சற்றுச் சோர்வு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். பேசும்போது பொறுமைவேண்டும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுஎடுப்பதற்கு உகந்தநாள். ஆலோசனை அவசியம். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்ப்புகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம் :** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படலாம். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும்.

**மீனம்:** புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தடைகளை அகலும். தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும்.

# வானதி சீனிவாசனுக்கு கொரோனாத் தொற்று!

சென்னை, நவ. 3

பாரதிய ஜனதாக் கட்சியின் மகளிரணி தேசியத் தலைவர் வானதி சீனிவாசனுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வந்த நிலையில், உடல்நலக் குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார் என்று மருத்துவமனை வட்டாரம் தெரிவித்தது. (ச-100)

# 'சித்திரமுத்திரைகள்' கண்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 3

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் 'சித்திர முத்திரைகள்' எனும் ஓவிய, கைவினைப் பொருள்களின் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை யாழ்ப்பாணத்திலுள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் தினமும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் நுண்கலைப் பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றையதினம் இடம்பெறும் ஆரம்ப நிகழ்வில் பிரபல ஓவியரும் தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளருமான கோ.கைலாசநாதன் பிரதம விருந்தினராகப் பங்கேற்று கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ச)

# நீர்க்கட்டணத்துக்கு இனி சிட்டையில்லை

கிளிநொச்சி, நவ. 3

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பாவனையாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த நீர்க்கட்டணச் சிட்டை நவம்பர் மாதம் தொடக்கம் வழங்கப்படமாட்டாது எனவும் அதற்கு பதிலாக குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் ஊடாகவே மாதாந்த நீர்க்கட்டண விவரங்கள் பாவனையாளர்களுக்கு அனுப்பப்படும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் நன்மை, செலவுகளை குறைத்தல், தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தல் போன்ற காரணங்களை அடிப்படையாக கொண்டு இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி பாவனையாளர்களுக்கு மாதாந்தம் நீர்க்கட்டண விவரங்கள் அவர்களது தொலைபேசிக்கு குறுந்தகவல்கள் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும். அவற்றைப் பயன்படுத்தி கட்டணங்களைச் செலுத்திக்கொள்ள முடியும்.

மேலும் நீர்ப் பாவனையாளர்கள் தங்களின் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரிகளை சரியாக பதிவு செய்து கொள்ளாதவர்கள் நீர்மானி வாசிப்பாளர்கள் சமுகமளிக்கும் போது அவர்களுடன் தொடர்பு பதிவு செய்துகொள்ளமுடியும் எனவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவித்துள்ளது.

பாவனையாளர்கள் இதுதொடர்பில் மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ளவேண்டுமாயின் 1939 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-214)

# சாந்தசோலை பாலத்துள் பாய்ந்தது சொகுசுக்கார்!

## இருவர் அருந்தப்பு



வவுனியா, நவ.3

வவுனியா ஏ-9 வீதியில் பயணித்த சொகுசுக் கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து சாந்தசோலை சந்திப்பகுதியில் உள்ள பாலத்துக்குள் பாய்ந்து கடந்த திங்கட்கிழமை விபத்துக்குள்ளானது.

சொகுசுக்காரில் பயணித்த இருவரும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர்.

அதேவழியில் சென்ற கனரக வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது, கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் தூண் ஒன்றை உடைத்துக்கொண்டு பாலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச மரக்கன்றுகள் மாதகலில் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 3
மாதகல் நலன்புரிச் சங்கமும் பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கமும் இணைந்து மாதகலில் இலவசமாக மரக்கன்றுகளை விநியோகிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளன.
அதன்படி மாதகல் கிராமத்தில் வசிக்கும் மூன்று கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இலவசமாக மரக்கன்று கள் வழங்கப்படவுள்ளன.
மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கான முன்பதிவு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 10 ஆம் திகதி வரை திங்கள், செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரையும், சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரையும், தமது குடும்ப அட்டையுடன் மாதகல் நலன்புரிச் சங்க அலுவலகத்துக்கு வருகை தந்து முன்பதிவுகளை மேற்கொள்ளலாம்.
பதிவுகளை மேற்கொண்டோருக்கு இலவச மரக்கன்றுகள் இந்த மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாதகல் நலன்புரிச் சங்க அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என மாதகல் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-66)



### வடமாகாணத்தில் நேற்று

# மருத்துவமனை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போர்!

**யாழ்ப்பாணம், நவ. 3**
**பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளின் ஊழியர்கள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், வடமாகாணத்திலுள்ள அரச மருத்துவமனைகளின் ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

ஊதியத்தை அதிகரிக்கவேண்டும், சுகாதார ஊழியர்களுக்கு ஐந்து நாள் வேலைத்திட்டத்தை வழங்க வேண்டும், ஓய்வூதிய சம்பளத்தை உறுதிப்படுத்தவேண்டும், மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்க வேண்டும், மருத்துவத்துறையில் நிலவும் இடர்பாட்டைப் போக்க வேண்டும், ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு ஆட்சேர்ப்பைச் செய்யவேண்டும், உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
காலை 7 மணிதொடக்கம் நண்பகல் 12 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது. வடமாகாணத்திலுள்ள அனைத்து அரச மருத்துவமனைகளின் ஊழியர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம-19-100,18,26)

# நயினாதீவு விகாரையில் பெரஹரா நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், நவ. 3

நயினாதீவு ராஜமஹா விகாரையில் கடந்த செவ்வாய்க்கிழமை பெரஹரா நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. பெரஹரா ஊர்வலமானது நயினாதீவு அம்மன் ஆலய பின்புற வீதியில் இருந்து ஆரம்பமாகி அங்கிருந்து நயினாதீவு ராஜமஹா விகாரைவரை சென்று நிறைவடைந்தது. இந்த ஊர்வலத்தில் கண்டிய நடனம், மயிலாட்டம், ஒயிலாட்டம், ஆதிவாசிகள் நடனம், இந்திய கதகளி நடனம், காவடியாட்டம், கோலாட்டம், குறவர் ஆட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-27)

# கஞ்சா விற்பனை; இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ. 3
யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கச்சேரிப் பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுகிறது எனப் போதைப்பொருள் தடுப்புப் பிரி வினருக்குக் கிடைத்த புலனாய் வுத் தகவலுக்கமைய சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
அவர்களிடமிருந்து 2 கிலோ மற்றும் 30 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 30 வயதுடைய இளைஞர்களே கைதுசெய்யப்பட்டனர். (ச-125)

# வறட்சிக்காலம் நிறைவுற்றது குடிநீர் விநியோகம் நிறுத்தம்

### தென்மராட்சிப் பிரதேச செயலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3
வறட்சிக்காலம் நிறைவுற்று மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், வறட்சி காரணமாக குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவிய தென்மராட்சிக் கிராமங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது என்று பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.
தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியை எதிர்நோக்கிய தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, கைதடி நுணாவில், மட்டுவில், இயற்றாலை, தாவடி, வரணி, கரம்பைக்குறிச்சி மற்றும் இடைக்குறிச்சி ஆகிய கிராமங்களுக்கு இலவசமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது.
ஜூன் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரை இடர்கால முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியுடன் இந்த குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வந்தது. இந்தநிலையில் தற்போது வறட்சிக் காலம் நிறைவடைந்ததையடுத்து குடிதண்ணீர் விநியோகம் நேற்றுமுன்தினத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)



# வட்டுக்கோட்டையில் மரக்கன்றுகள் நடல்

யாழ்ப்பாணம், நவ. 3
வட்டுக்கோட்டை கொற்கைத்துறை இந்துமயான அபிவிருத்திச் சங்கம் மற்றும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் வட்டுக்கோட்டை கொற்கைத்துறை இந்துமயான வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது. சங்கானை பிரதேச செயலர் கலந்துகொண்டு மரநடுகையை ஆரம்பித்து வைத்தார். (ச)

# விவசாயத் திணைக்களத்தால் மரநடுகையை முன்னெடுங்கள்

### ஆளுநருக்கு அவைத்தலைவர் கடிதம்

வடமாகாண மரநடுகை மாதமாக நவம்பர் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வடமாகாணசபையின் விவசாயத் திணைக்களத்தின் மூலம் இந்தத் திட்டத்தை இவ்வருடம் முன்னெடுக்க வேண்டும் என்று வடக்கு ஆளுநரிடமும், வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமும் வடமாகாணசபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார். வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-20,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதயனின் பரிசுக்குவியல்

**நெதர்லாந்து - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (03.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

தினம் ஒரு பரிசு 30

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ..........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ..........................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தே.அ.இல : ..........................................
தொ.இலக்கம் : ..........................................

மெகா பரிசு

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணி முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்... அனுப வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனி (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகா தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

நெதர்லாந்து - ஆப்கானிஸ்தான்

இடம் : லக்னோ
நேரம்: பி.ப. 2.00

### 55 ஓட்டங்களில் சுருண்டு

# இலங்கைக்கு நேற்று அவமானத் தோல்வி!



**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் வெறும் 55 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து இந்தியாவிடம் படுதோல்வியடைந்தது இலங்கை அணி.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இரவு நேரத்தில் பந்துவீசுவது சிரமமாயிருக்கும் என்பதால் முதலில் பந்துவீசுவதற்காக இந்த முடிவை இலங்கை அணி எடுத்தது.

ஆரம்ப வீரர் ரோகித் வெறும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் இணைப்பாட்டம் அமைத்த கில் மற்றும் கோலி இருவரும் இந்திய அணியைப் பலப்படுத்தினார்கள். இருவரும் சதம் கடப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 92 ஓட்டங்களுடன் கில்லும், 88 ஓட்டங்களுடன் கோலியும் அடுத்தடுத்து வீழ்ந்தனர். மத்திய வரிசையில் களமிறங்கிய ஸ்ரேயஸ் அடித்தாடினார். இலங்கையின் பந்துவீச்சாளர்களை நாலாபக்கமும் சிதறடித்தார். ராகுல் 21, சூரியக்குமார் யாதவ் 12 என்று அடுத்தடுத்து ஆட்டமிழந்தாலும் ஸ்ரேயஸின் அதிரடியால் இந்திய அணி பலம்பெற்றது. 56 பந்துகளில் 82 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் ஸ்ரேயஸ். ஜடேஜா 35 ஓட்டங்களைப் பெற இந்திய அணி 8 விக்கெட்களை இழந்து 357 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மதுசங்க 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பம் முதலே பெரும் சரிவுக்குள் தள்ளப்பட்டது. ஆரம்ப வீரர்கள் இருவருமே ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தனர். பதும் நிசங்க, பும்ராவின் பந்துவீச்சிலும், கருணாரத்ன, சிராஜின் பந்துவீச்சிலும் ஆட்டமிழந்தனர். தொடர்ச்சியாக குசல் ஓர் ஓட்டத்துடனும், சமரவிக்கிரம ஓட்டமெதையும் பெறாமலும் சிராஜால் பவிலியனுக்கு அனுப்பப்பட இலங்கை அணி 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தத்தளித்தது. மத்தியூஸ் கொஞ்சம் தாக்குப்பிடித்தாலும் அசலங்க, ஹேமந்த 0, சமீர 0 என அடுத்தடுத்து வருவதும் போவதுமாக இருந்தனர். மத்தியூஸும் ஆட்டமிழக்க இலங்கை அணி 29 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்தது. தீக்சன, ராஜித இருவரும் பின்வரிசையில் பெற்ற 12, 14 ஓட்டங்கள் கைகொடுக்க இலங்கை அணி பெரும்பாடுபட்டு 50 ஓட்டங்களைத் தாண்டியது. எனினும் 55 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. பந்துவீச்சில் சமி 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ம)



# உலகக்கிண்ணத்திலிருந்து மிச்செல் மார்ஷ் விலகல்!

உலகக்கிண்ணத் தொடரில் இருந்து விலகி, நாடு திரும்பியுள்ளார் மிச்செல் மார்ஷ்.

உலகக்கிண்ணத் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்திருந்த மார்ஷ், அந்த அணிக்காக இதுவரை சிறந்த பங்களிப்பை வழங்கி வந்தார். இந்த நிலையில் அவர் தொடரில் இருந்து விலகி நாடு திரும்பியுள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக மார்ஷ் விலகி வெளியேறியுள்ளார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

முன்னதாக விபத்தில் சிக்கிய மக்ஸ்வெல் காயம் காரணமாக அடுத்த ஆட்டத்தில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ள நிலையில் மார்ஷின் விலகல் அவுஸ்திரேலிய அணிக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகின்றது. (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 28 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சா.ஆரணி | - நெளுக்குளம் | ம.தட்சிகன் | - மிருசுவில் |
| ச.வசந்தகுமார் | - நெடுங்கேணி | து.பிரபாலினி | - நெடியகாடு |
| ம.துஷிகெஸ்ரன் | - யாழ்ப்பாணம் | வி.விக்டர் சோசை | - மடு |
| வி.ரெட்சன் | - குருநகர் | எஸ்.ஜேயலக்ஸ்மி | - நெல்லியடி |
| எஸ்.விமலா | - மீசாலை | நு.இரட்சகன் | - இருபாலை |
| சு.சுதாகரன் | - நாவாந்துறை | க.காந்தரூபன் | - வவுனியா நகர் |
| ச.செல்வக்குணசந்திரன் | - ஓடக்கரை | கி.கிருபாகரன் | - நவாலி |
| [illegible] | - திருநெல்வேலி | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## வேலு (வேலன்) நாகேஸ்வரி



உயிர் தந்த எம் அன்னையே !
ஓராண்டு போனதம்மா
உன் முகம் பாராமல்

குன்றின் மணி விளக்கே- எங்கள்
குல தெய்வமே !
வல்லமையாய் வாழ்ந்து
வழி நடத்திய எம் அன்னையே!

நிழற்குடையாய் எம்மை நித்தமும்
- காத்தாய்
விழி மூட மறுக்குதம்மா-உன்
இமை மூடிப் போனதனால்

ஒரு மலராய் மலர்ந்து
பலர் வாழ மணம் வீசிய அன்னை
என்றும் அழியாத உன் பாசம்
எம்மை விட்டு அகலாது தாயே!

அன்னையின் பாதத்தில் பணிந்து
என்றும் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் !

அன்னாரின் இல்லத்தில் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!

தோற்றம் 13.02.1951 | மறைவு 13.11.2022

கைதடி மேற்கு,
கைதடி.
077 669 0700

நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

---

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 10 . 1938



மறைவு 02 . 11 . 2023

### திருமதி பெரியக்கா இருளப்பன்

கேகாலையை பிறப்பிடமாகவும், வவுனியா மடுக்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, இல. 442/06 ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பெரியக்கா இருளப்பன் அவர்கள் நேற்று (02.11.2023) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நா.இருளப்பன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைசாமி வெள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகளும், முருகேசன், ரஞ்சன், முத்துலெட்சுமி, அண்ணாதுரை, சுதுகுமார், ஞானப்பிரகாஸ் (பிரகாஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வவுனியா தங்கராசா அவர்களின் அன்புச் சகோதரியும், பத்மாவதி, சறோஜா, காலஞ்சென்ற சண்முகம் மற்றும் மகேஸ்வரி, சுபா (ஜெயந்தி) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை 442/06, கஸ்தூரியார் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 02.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிரகாஷ்
தொ.பே.இல.: 077 9400 685

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும்
பூட்டப்பிள்ளைகள்.

(CS 26791) A-1

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1943



மறைவு 01 . 11 . 2023

### கனகலிங்கம் சரஸ்வதி (பரஞ்சோதி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சரஸ்வதி (பரஞ்சோதி) அவர்கள் கடந்த (01.11.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், றஞ்சினி, கலைவாணி, விக்கினராஜா, சுலோசனா (ஆசிரியர்), ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரன், சிவனேந்திரன், மேரிகெலன், காலஞ்சென்ற பிரபாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, கணேசமூர்த்தி, தனலட்சுமி, கிருஸ்ணமூர்த்தி, சிவலிங்கம், கனகரத்தினம் மற்றும் சுப்பிரமணியம், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விதுஷன், நிரோஜன், சிவானுஜன், சிவகாருஜன், பவின் பவிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை அளவெட்டி கேணிக்கரையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26793) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 3
யாழ்.போதனா மருத்துவமனை குருதி வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையில் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் குருதிக்கொடை முகாமொன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
இந்தக் குருதிக்கொடை முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை இடம்பெறவுள்ளது. குருதிக்கொடையாளர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடை வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-66)

## சுழிபுரம் கதிர்வேலாயுதர் கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம், நவ. 3
சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.13 மணி முதல் முற்பகல் 10.25 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.
மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 நாள்கள் மண்டாலாபிஷேகம் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு கடற்றொழிலாளர்களிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இரண்டு தரப்பினருக்கும் இடையில் அண்மைக்காலமாக நிலவிவந்த தொழில்சார் முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ம-27)

## துயர் பகிர்கின்றோம்



மண்ணில் 16 . 07 . 1966
விண்ணில் 02 . 11 . 2023


எமது கல்லூரி முதல்வர் திரு.க.சண்முகதாஸ் அவர்களின் அன்புத் துணைவியார்

**அமரர் சரஸ்வதி சண்முகதாஸ்**

நிழலாகிவிட்ட நேற்றைய நிஜங்கள்
நெஞ்சத்தில் நின்று இன்னும் இனிக்கின்றன.
உமக்காக விட்ட கண்ணீரின் சுவடுகூட அழியாதபோது
எமக்குள் இருக்கும் உம் நினைவை எப்படி அழிப்பது?
இதயத்து நினைவென்ன பாதச் சுவடா? பரவிவிட்டு செல்ல
நினைவுகள் என்ன நீர்க்குமிழியா? தானாகவே அழித்துக்கொள்ள
உம் நினைவுகள் என்றும் அழியா பசுமரத்தாணி போல
என்றென்றும் நிலைத்து நிறைந்திருப்பீர் எம் மனதில்.

அன்னாரின் பிரிவதனால் ஆறாத்துயருற்றிருக்கும் அவர்தம் உறவுகளுக்கு அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலிதனைக் காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காய் இறைதாழ் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
துயரில் பங்கேற்கும்.
பாடசாலைச் சமூகம்
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
(CR 40602) A-1

## மரண அறிவித்தல்



**கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா (அப்பு)**

சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை வசந்தராஜா (அப்பு) அவர்கள் கடந்த (30.10.2023) திங்கட்கிழமை மதியம் இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை - குணரதி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், அமுதமலர் அவர்களின் அன்புக் கணவரும், சுஜீவன், அனுரேகா, ஜனனி, விதுஷன் ஆகியோரின் பாசமிகு தகப்பனும், மயூரி, வினோபாஜி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதவன், ரேவிகா ஆகியோரின் அருமைப் பேரனும், இராசேந்திரம், காலஞ்சென்ற ஜெயபாலசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், மகாலக்சுமி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 2 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்,
076 3915 184
(CR 40603) A-1


## மணிவிழா வாழ்த்து




யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றி அகவை அறுபதில் காலடி வைக்கும்
**திரு.செல்லத்துரை விக்கினேஸ்வரன்**
சேவைக்காலம் - 21.07.1993 - 03.11..2023
(30 வருடங்கள்)
அவர்கள் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: குடும்பத்தினர்
கோப்பாய் தெற்கு, இருபாலை.
மகன் - 076 467 8361
(cs 52697) (N.1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 10 1933
இறப்பு 31 10 2023



**திரு.மோசஸ் தார்சீசியஸ்**
இளைப்பாறிய ஆசிரியர்
(சுன்னாகம், ஸ்கந்தர்வரோதயக் கல்லூரி)

யாழ்ப்பாணம் இல.2 அச்சக வீதியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 39, மத்தியூஸ் வீதி மற்றும் கொழும்பு தெகிவளை குவாறி வீதியை வசிப்பிடமாவும் கொண்ட திரு.மோசஸ் தார்சீசியஸ் அவர்கள் 31.10.2023 அன்று இறைபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மோசஸ், நல்லம்மா தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம், அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிசிலியா தார்சீசியசின் அன்புக் கணவரும், Dr.T.E. மல்கம் (Colombo South Teaching Hospital,Kalubowila), மொறிஜியஸ் மொறிஸ் (Canada) காலஞ்சென்ற மெர்லின் மைதிலி (ஆசிரியர், St Patrick's College, Jaffna) ஜெனிசியஸ் மினோஷன் (QS,Qatar), செறபின் சசியானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. நளிர்மதி (Colombo South Teaching Hospital, Kalubowila), எறின் றதிக்கா (Canada), கிறிஸ்ரெலா (Qatar), யோகராஜா (Area Sales Manager,Packso Ceylon (pvt) Ltd.) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சலோ, ஏட்றியன், ஸ்ருதிஷா, யஸ்வின் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான மரியராணி அடைக்கலம், மரியநாயகம், டைனீசியஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா இராசரட்ணம், மேரி திரேசா கிறேஸ், அருளப்பு முத்துராசா, றீற்றம்மா பூமணி, பீற்றர் மற்றும் மரியநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை (01.11.2023) காலை 9.00 மணி முதல் Jayaratne Funeral Parlour, No. 292, Hospital Road, Kalubowila இல் அஞ்சலிக்காக வைக்கப்படும். அன்னாரின் நல்லடக்க ஆராதனை வெள்ளிக்கிழமை (03.11.2023) காலை 10.30 மணிக்கு நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இல. 92A, குவாறி வீதி,தெகிவளை.

தொடர்புகளுக்கு-
மகன்- Dr.மல்கம்- 0727707938
மகன்- மொறிஸ் - +1 (647) 5309642
மகன்- மினோஷன் - 0766161455
மகள்- சசியானி-0763005894
மருமகன்- யோகராஜா-0775587194

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விடிவுக்காக தொடர்ந்து செயற்படுங்கள்

## சம்பந்தனுக்கு ஜெயசேகரன் கடிதம்

**யாழ்ப்பாணம், நவ. 3**

**விமர்சனங்களுக்குச் செவிசாய்க்காது தமிழ்மக்களின் விடிவுக்காக விரைந்து செயற்படுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனுக்கு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரன் கடிதம் அனுப்பியுள்ளார்.**

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

தமிழ்மக்களின் மூத்த தலைவராகிய தங்களுக்கு உரிமையோடும், பணிவோடும் சில விடயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். இலங்கை அரசு இந்த நாட்டைச் சிங்கள- பௌத்த நாடாகச் சித்திரித்து அதற்கான முழு வேலைத் திட்டத்தையும் செயற்படுத்திக் கொண்டு வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழர் தம் பெரும்பான்மையை இழந்துள்ளனர். வடக்கு விரைவாகப் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. ஒருபுறம் பேச்சு நடத்திக் கொண்டு மறுபுறம் வடக்கு - கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள், வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்திச் சபை போன்றவற்றினூடாகத் தமிழர்களுடைய பாரம்பரிய நிலங்களைச் சூறையாடுவதும் கோயில்களை அழித்துப் புத்தபெருமானை பிரதிஷ்டை செய்வதும், தமிழ்மக்களுக்கான வேலைவாய்ப்புகளைப் புறக்கணிப்பதும் தொடர்ந்தும் அன்றாட நிகழ்வாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இப்படியாகத் தமிழ்மக்கள் பல முனைகளில் தாக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தியா உட்பட ஜனநாயக நாடுகளெனத் தம்மை அடையாளப்படுத்தும் நாடுகள் தமிழர்களையும், தமிழர் தாயகத்தையும், அவர்களுடைய மனித உரிமைகளையும் பாதுகாக்கவும், நடக்கும் அநியாயங்களைத் தட்டிக் கேட்கவும் முன்வரவில்லை. இன்னும் சிறிது காலத்தில் வடக்கு -கிழக்கில் தமிழர்கள் தங்கள் தாயகத்தை விரைவாக இழந்து விடுவார்கள். இவை எல்லாம் தாங்கள் அறியாத விடயம் அல்ல.

உடல் ரீதியாக நாங்கள் பலவீனப்பட்டிருந்தாலும் சிந்தனை மற்றும் அறிவுபூர்வமான செயற்பாடுகளில் நீங்கள் இன்னும் ஆற்றல் நிறைந்தவரா கவே இருக்கின்றீர்கள் என நாம் நம்புகின்றோம். அந்தவகையில் இந்தியா, அமெரிக்கா உட்பட வெளிநாட்டு இராஜதந்திரிகள், தமிழர் தரப்புப் பிரச்சினைகளைத் தொடர்பாகத் தங்களைச் சந்தித்துக் கலந்துரையாடுகின்றார்கள். மறைந்த எமது தலைவர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற தலைவர்களுடன் தாங்கள் இணைந்து செயற்பட்டவர் என்ற முறையிலும், பல உலக இராஜதந்திரிகளுடன் எமது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தவர் என்ற ரீதியிலும் தமிழ் இனத்தின் பிரச்சினைகளை முற்றுமுழுதாக அறிந்தவர் என்ற ரீதியிலும் தமிழ்மக்களை வழிநடத்துவதற்குத் தமிழ்த் தரப்பால் ஜனநாயக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அங்கீகாரமும், ஆணையும் தங்களுக்கு வழங்கப்பட்டது.

ஆகவே, தேவையற்ற விமர்சனங்களுக்கு அப்பால், தற்போதுள்ள தலைவர்களுள் தமிழ்மக்களால் அங்கீகரிக்கப்பட்ட மூத்த தலைவர் என்ற ரீதியில் தமிழ்மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தரும் கடமையும், பொறுப்பும் தங்களுக்கு உள்ளது என்பதை தங்கள் கவனத்திலெடுத்துச் செயற்படுவீர்களென எதிர்பார்க்கிறோம் - என்றுள்ளது. (ம-66)


## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

பூவுலகில் 01 . 01 . 1981



மண்ணுலகில் 18 . 10 . 2011

**அமரர் செல்லத்துரை வினோகரன்**

(திதி : 03.11.2023 - ஷஷ்டி )

ஆண்டுகள் பன்னிரண்டு ஆனதென்று
அழுதிங்கு புலம்புகின்றோம்
கோடி ஆண்டுகள் ஓடியிங்கு போனாலும்
அழியாது என்றென்றும் அழகான உன்

ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்
இடைக்குறிச்சி மேற்கு,
வரணி. (26560) (AK-1)


# கெருடாவில் இந்துவுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரம்

## சந்நிதியான் ஆச்சிரமம் கையளிப்பு



யாழ்., நவ. 3

கெருடாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் புதிய நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. சுமார் 4 இலட்சம் ரூபா நிதிப்பங்களிப்பில் இந்த இயந்திரம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாணவர்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் சு.சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் விருந்தினராக பங்கேற்று குடிதண்ணீர் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (ச-66)


## மரண அறிவித்தல்

**செல்வி கனகேஸ்வரி செல்லத்துரை (பவாச்சித்தி)**

**(Rtd. Branch Manager - RG Company)**



**நல்லூர் - மங்களகிரியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்வி கனகேஸ்வரி செல்லத்துரை** நேற்று (02.11.2023) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற **உடையார் செல்லத்துரை - மீனாம்பாள்** (திருநெல்வேலி - நல்லூர்) தம்பதியின் பாசமிகு கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற **உடையார் பொன்னம்பலம் - விசாலாட்சி** (திருநெல்வேலி) மற்றும் **கந்தையா பிரம்மாத்ம முதலி - நல்லம்மாள்** (நல்லூர்) தம்பதிகளின் பேர்த்தியும், நாகேஸ்வரி, பரமேஸ்வரி, அகிலேஸ்வரி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரியின் அன்பு சகோதரியும், பிரான்சிஸ் சேவியர் மாணிக்கவாசகர், செல்வரட்ணம், ஜெயரட்ணம், சோதிமலர், சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீரங்கன், சந்திரமோகன், விஜிதபாமா ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும், சுதாஜினி, சுதாகரன், திருபாகரன், சுதர்ஜினி, சுபாஜினி, ஆதவன், அரவிந்தன், ஆதினி, ஆதீசன், ஜனித், ஜதீஸ் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், விஷ்ணுகாருணியின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில், சைவப்பாடசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (தம்பி)
(உரிமையாளர் - கவிலா ரேட் சென்ரர்)
KAVILA TRADE CENTRE.

**தொ.பே இல. 077 3107601**

(CS 26794)(A-)



## மரண அறிவித்தல்



**நாகரட்ணம் இரவீந்திரன்**

இமையாணன் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் தோட்டத்து வளவு வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் இரவீந்திரன் நேற்று (02.11.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் தெய்வானை தம்பதியரின் மருமகனும், செல்வமணியின் அன்புக் கணவரும், நிர்மல், அபர்ணா, சதீஸ், ஆர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேவதி, பிரபாகரன், துஸ்ஷானி, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷன், பிரிபீஷன், பிரிஷிகா, பிரவினாஸ், அத்ரிகா, அம்ரிதா, அதிதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், பாலசுப்பிரமணியம், கலாவதி, சோல்பரி, சந்திரவதி, கேஸ்வரலோலன், றமேஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை பிறபகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோட்டத்துவளவு, வதிரி, கரவெட்டி.**
**0777 983 062 மகன் - நிர்மல்**
**077 844 8368 மகன் - சதீஸ்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 26792)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கட்டண உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

மின்கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆறு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு நகருக்குள் நுழைவதற்கு முன்னதாகவே தடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-6)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு. **வேல்முருகன் துஷ்யந்தன்**
அவர்களின் அன்புத் தந்தை

**இராசையா வேல்முருகன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs52709) (N.1)



## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)

பதிவு திகதி : 01.03.1972 சங்க பதிவு இலக்கம் :- J/1572

**கிராமியவங்கி முகாமையாளர் 205/09,**
**கிராமியவங்கி எழுதுநர் 300/12**

### பதவி வெற்றிடங்களுக்கு வெளிவாரி விண்ணப்பம் கோரல்

**1. பதவி:-கிராமியவங்கி முகாமையாளர்**

குறியீட்டு இலக்கம் :- 205/09 பதவி எண்ணிக்கை :- 01
சம்பள அளவுத்திட்டம் :- 09
20200-250 x 10-260 x 10-25300 ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ: கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கி பிரிவு பதவி ஒன்றில் ஆகக்கு றைந்தது (2) ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கி பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

ஆ. இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் வங்கியியல் டிப்ளோமா பரீட்சை பகுதி 1 /நுண்நிதியியல் டிப்ளோமா சித்தி.

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியுடன் கிராமியவங்கிப் பிரிவில் இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது (03) ஆண்டு கால அனுபவம் /

க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் மூன்று பாடங்களுடனான சித்தியுடன் நிதிச்செயற்பாட்டுடன் தொடர்புடைய நிறுவனத்தில் ஆகக் குறைந்தது (4) ஆண்டு கால அனுபவம்.

குறிப்பு :- MS Office கற்கைநெறி மேலதிக தகைமையாக கருதப்படும்.

**2. பதவி:-கிராமியவங்கி எழுதுனர்** பதவி எண்ணிக்கை :- 01
குறியீட்டு இலக்கம் :- 300/12 சம்பள அளவுத்திட்டம் :- 12
18820-170 x 10 - 185 x 10-22370 ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் (2) வருட அனுபவம் அத்துடன் கணினியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்/

கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் (04) வருட அனுபவம் அத்துடன் கணணியை உபயோகித்துப் பணியாற்றும் ஆற்றலை உறுதிப்படுத்தும் அனுபவச்சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

ஆ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி/க.பொ.த.உயர்தரத்தில் கணக்கியல் உட்பட 03 பாடசித்தி அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களுக்கு குறையாத MS Office கற்கைநெறி / அதனை ஒத்த கணினி கற்கை நெறியினை பயின்று சான்றிதழ் பெற்றிருத் தல் அத்துடன் 03 வருட கணனி தொடர்பான அனுபவம்.

இ. **(அ) அல்லது (ஆ)** தகைமைப் பிரிவில் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் தமது தகுதிகாண் காலத்தினுள் மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் கிராமிய வங்கியியல் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

1. விண்ணப்ப முடிவுதிகதியில் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்கூட்டுறவுச்சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்கழிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச்சங்க பணியாளர்கள் தாங்கள் கடமை புரியும் கூட்டுறவுச்சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும். கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் தமது கூட்டுறவுச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படாது விடில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. தகுதியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை பற்றிவிண்ணபதாரிக்கு அறிவிக்கப்படமாட்டாது.
3. சங்கம் கோரும் பிணைப்பணத்தினை ரொக்கமாக செலுத்துவதுடன் சங்கம் கோரும் ஆதனப் பிணையும் செலுத்துதல் வேண்டும்.
4. **விண்ணப்ப முடிவுத்திகதி :- 18.11.2023**
5. சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்து சான்றிதழ் களின் போட்டோப்பிரதிகளையும் இணைத்து பதிவு தபாலில் "பொதுமுகாமையாளர் **கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம் தாவடிச்சந்தி, கோண்டாவில்"** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர்.குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.பதிவுத்த பாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
27/10/2023

(cr.40867) (N.1)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 15 . 05 . 1942 — உதிர்வு 04 . 10 . 2023

கடந்த 04.10.2023 புதன்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
### கனகரத்தினம் பூமணி

**திதி: புரட்டாதி மாத தேய்பிறை சஷ்டி**

உயிருக்கு உயிராக இருந்து எமைக்காத்த எமது அம்மாவே !
நாட்கள் பல ஆனாலும் ஆறவில்லை எங்கள் துயரம் அம்மா !......

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத்தொடர்ந்து **11.30** மணியளவில் ஆத்ம சாந்திப்பிராத்தனையும், மதியபோசன நிகழ்வும் **இலங்கை வேந்தன் மண்டபத்தில் (இந்துக்கல்லூரி மைதானத்திற்கும் நீராவியடிபிள்ளையார் கோயிலுக்கும் இடையில்)** நடைபெற இருப்பதனால் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு பலவழிகளிலும் உதவி புரிந்த நெஞ்சங்களுக்கும், தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**
077 722 2601, 077 899 7263

**இல 124, பலாலி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(cs26757)

## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 04 . 1978 — உதிர்வு 01 . 11 . 2023

### பொன்னையா ஸ்ரீகாந்தன்

மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் அரசவீதி, உரும்பிராய் கிழக்கை வதிவிடமாக கொண்டவரும் உடையார்கட்டு தெற்கை தொழில் நிமித்தம் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா ஸ்ரீகாந்தன் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.11.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ரோகினிதேவியின் அன்புக் கணவரும், செல்வி ஸ்ரீகாந்தன் தீபிகாவின் பாசமிகு தகப்பனாரும், அமரர் சரவணமுத்து பொன்னையா புவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், அமரர்களான கோபாலகிருஷ்ணன் கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், குமுதினி, விஜயகுமுதினி, விஜயகாந்தன், ஜெயகுமுதினி, ஜெயக்காந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சினி, சுபாசினி வேணுதர்சன் துஷாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, உரும்பிராய் தெற்கு இளங்காட்டு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 26782) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 கண்புரையாளர்களுக்கு யாழ்.போதனாவில் சத்திரசிகிச்சை



யாழ்ப்பாணம், நவ.3
கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவையுடைய 1000 பேருக்கான சத்திரசிகிச்சைகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் 5 தினங்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்று வருகின்றன.

உலக பார்வை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம்-இரத்தினபுரி மருத்துவமனைகளின் நல்லுறவில் அலாக்கா மற்றும் ஆனந்தா பவுண்டேஷனின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மருத்துவமனையின் கண் சிகிச்சை மருத்துவ நிபுணர் மலரவனின் நெறிப்படுத்தலில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்குபற்றுதலுடன் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

முதல் நாளன்று யாழ்ப்பாண சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலிருந்து 50க்கும் மேற்பட்டோருக்கும் அநுராதபுரம், மதவாச்சி, பதவியா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 170 க்கும் மேற்பட்டோருக்கும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

ஏனையோருக்கு எதிர்வரும் நாள்களில் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி- 125)


## பெயர்மாற்றம்

ஊரெழு கிழக்கில் வசிக்கும்
**கிருஸ்ணபிள்ளை விஜயகுமாரன்** ஆகியநான் எனது
பெயரை **கிருஸ்ணபிள்ளை விஜயகுமார்** என
மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும்
**கிருஸ்ணபிள்ளை விஜயகுமார்** என்றே கையொப்பம்
இடுவேன் என இலங்கை சோஷலிச குடியரசு
மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS52711) (Ak.1) கிருஸ்ணபிள்ளை விஜயகுமார்

## LIONS CLUB OF JAFFNA GATEWAY







**யாழ். நுழைவாயில் அரிமாக் கழகம்**
**Lions Club of Jaffna Gateway** கடந்த
**29.10.2023** அன்று **Lions Club Of**
**Trincomalee Town** உடன் இணைந்து
திருகோணமலை நிலாவெளிப் பிரதேசத்தில் வறுமைக்
கோட்டின் கீழ் உள்ள குடும்பத்திற்கு **குழாய்க்
கிணறு ஒன்றினை ஏற்படுத்தி அதற்குத்
தேவையான தண்ணீர் பம்பி** ஒன்றினையும்
அதற்குத் தேவையான வசதிகளையும் அமைத்து
வழங்கி வைத்தனர் இச் சேவைத்திட்டத்திற்கு யாழ்.
நுழைவாயில் கழகத் தலைவர் மற்றும்
அங்கத்தவர்கள் நேரில் சென்று சேவைத்திட்டத்தினை
சிறப்புற நடாத்தினர்.

(CS52710) (N.1)




## தேசியமட்டத்துக்கு தெரிவான வீரர்களுக்கு சீருடை

முல்லைத்தீவு, நவ.3
வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் தடகளத்தில் தேசியத்துக்குத் தெரிவாகிய விசுவமடு பாரதி வித்தியாலய மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலை முதல்வர் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் சுவிஸ் வர்த்தகரும் விசுவமடுவிலுள்ள 'புகழ்பிறை' உணவக உரிமையாளருமாகிய நிசாந்தனால் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பில் இந்தச் சீருடைகள் வழங்கப்பட்டன. (ச-19)


# INVITATION FOR BID
## PSDG - 2023
## Manthai East Pradeshiya Sabha – Pandiyankulam

1) The Chairman, Local Authority Procurement Committee on behalf of Manthai East Pradeshiya Sabha, Northern Province invites sealed bids from eligible and qualified Bidders for the works described in the table below.
2) Bidding will be conducted through National competitive bidding procedure. However, according to the public finance circular no 04/2016(ii) dated 2019.05.08 regional preference and CIDA grade preference shall apply.
3) To be eligible for contract award the successful bidders shall not have been black listed and shall have been registered in the field of Road and Building for grade mentioned in the table below with the Institute for Construction Industry Development Authority (CIDA).
4) Qualification requirements are indicated in section 4 of the bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
5) Interested bidders may obtain further information from *Chairman, Procurement committeeManthai East Pradeshiyasabha.-Pandiyankulam (Te.No-021 228 3475, Fax No-021 228 3476)* and inspect the bidding documents at the address given below from any working days 9.00 hrs to 14.00 hrs from 2023.11.03 till 2023.11.17
6) A complete set of Bid Documents in English language may be purchased by interested Bidders on the submission of a written application to the *Manthai East Pradeshiyasabha.* From 2023.11.03 until 2023.11.17 from 09.00 hrs to 14.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs.2,000.00. The method of payment will be by cash.
7) Bids shall be delivered of Original and duplicate to the address *Secretary,Manthai East Pradeshiyasabha on* or before 14.30 hrs on 2023.11.17 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend.

| S.No | Contract No | Description of Work | Source of Fund | Estimated Civil Cost (Million) | Contract Period | Required Grade | Required Bid Security | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Bid Validity Days | Bid Validity Period | Security amount | Security Validity Period |
| 01 | NP/14/44/(02)/02/PSDG/2023/06 | Renovation of Pandiyankulam 3rd Lane, Pandiyankulam 4th Lane , Pandiyankulam amman Lane,and Pandiyankulam Navalar Lane | PSDG | 2.131 | 30 Days | C9/C8 | 49 Days | 2024.01.05 | 32,000.00 | 2024.02.02 |

Bid security is as following table
**Bid invitation table**
8 Pre bid meeting will be held on 2023.11.10 at 14.30 in Manthai East Pradeshiyasabha ,Pandiyankulam. Interested bidders may attend the pre bid meeting at their own expenses.
9 The procurement committee has the power to reject the bid as totally or partly and to call retender

Chairman,
Local Authority Procurement Committee
Manthai East PradeshiyaSabha,Pandiyankulam
2023.11.03

(CR 40901) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 23 - 12 - 1947



விண்ணில் 28 - 10 - 2023

## பொன்னையா சிவபாலசுந்தரம்

யாழ். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன், கனடா Brampton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவபாலசுந்தரம் அவர்கள் கடந்த (28-10-2023) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திரலீலா அவர்களின் அன்புக் கணவரும், ராஜகாந்தன் வசீகரன், தயாழினி பிரபாகரன், பானுரேகா, அச்சுதன், தர்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்ஷினி பிரஷாந்தினி, ரகுநாத், மாலினி, துசியந்தன், அபர்ணா நிமேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான குலமணிதேவி, கமலாதேவி மற்றும் செல்வராசா, குமாரசிங்கம் மல்லிகாதேவி, நிர்மலாதேவி, ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புவனேஸ்வரி, றஜனி, காலஞ்சென்றவர்களான இராசையா, சிவராசலிங்கம், கெங்காசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நடராஜா, பத்மினிதேவி, பத்மநாதன், செல்வராணி, நிர்மலன் பிரியதர்சினி, பிரபாஜினி, சிந்துஜா, சிந்துமுகி, காலஞ்சென்ற இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஸ்ணலிங்கம், கஜீவன், தனுசன், மதுராங்கனி, காலஞ்சென்ற சசிராஜ் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், வைஷ்னவன், கௌசிகன், தன்சிகா, மபிசன், அபிணா, அயின், திவ்வியா, டக்ஷி, கர்ணிகா, கபிஷா, கவிசன், ஹரிசன், ஹரிசா, ஆரியன், அர்ஜனன், ஆர்யா, அனுஷ்கா, சியாறா, சகீறன், நிவீனா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று 8911 Woodhine Ave Maekham on L3R 5G1 Canada இல் நடைபெறும்.

அன்றையதினம் புன்னாலைக்கட்டுவனில் உள்ள அன்னாரது சகோதரி மல்லிகாதேவி அவர்களது இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தொடர்பு :
074 011 1170

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 06 . 1960



மறைவு 01 . 11 . 2023

## திருமதி கோகிலா சிவநாதன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோகிலா சிவநாதன் நேற்று முன்தினம் (01.11.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், கனகசபை இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், சிவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், உசங்கர் (அவுஸ்ரேலியா), உதயசங்கர் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தினி (அவுஸ்திரேலியா), சிவனுஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்ஷயா, விஸ்வ ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்ற கமலாம்பாள் மற்றும் ரமணியம்பாளின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
உசங்கர் - + 614 230 95322
உதயசங்கர் - + 614 138 28553
+ 947 708 73203


(cs.26786) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## இராசையா இராஜேந்திரவரதன் (கஜேந்திரன்)

### (ஓய்வுபெற்ற வல்வெட்டித்துறை நகரசபை கணக்குப்பதிவாளர்)



தோற்றம் 25.03.1946

மறைவு 31.10.2023

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்.அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா இராஜேந்திரவரதன் கடந்த (31-10-2023) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் அன்னம்மா ஆகியோரின் மருமகனும, காலஞ்சென்ற புஸ்பலீலாவினதும், புவனேஸ்வரியினதும் அன்புக் கணவரும், பிரேமிளா (ஜேர்மனி), திரிபுரன் (லண்டன்), தயாபரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமார், அர்ச்சனா, குகந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவித்தா, நிருசங்கர், ஜெனார்த்தன், சக்தி, சனன், யாதவி, ஹஸ்வின் அவர்களின் அன்புப் பேரனும் ஆதீஷ், ஆலியா அவர்களின் பாசமிகு பூட்டனும், சச்சிதானந்தம், தேவகாந்தன், சந்திரகாந்தன், புஸ்பகாந்தன், கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு அண்ணனும், யெகசோதி, புஸ்பநாயகி, ஸ்ரீகோதை, அனித்தா, கணேசா ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அயலவர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

துரைஜயா அவெனியூ,
சந்நிதி வீதி,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்
இ.தயாபரன்
021 205 8544

(cs.52704) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத்தில்

# கம்பனி நடைமுறைகள் இல்லாமல் செய்யப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 3

மலையகத்தில் கம்பனி நடைமுறைகள் இல்லாமல் செய்யப்படும். மலையக மக்களுக்கு பத்து பேர்ச் காணி உறுதியுடன் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கைக்கு இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு நேற்று நடைபெற்ற 'நாம் 200' விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளும் வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கிறது. இதனைச் செயற்படுத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தில் கம்பனி நடைமுறைகள் இல்லாமல் செய்யப்படும். மலையக மக்களுக்கு பத்து பேர்ச் காணி உறுதியுடன் வழங்கப்படும். அத்துடன் கல்வித்துறையில் அனைவருக்கும் சமத்துவ வாய்ப்பை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது - என்றார். (அ-ம)

### இந்திய...

மலையக மக்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகைதந்து 200ஆவது ஆண்டை முன்னிட்டு இலங்கையில் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக நிர்மலா சீதாராமன் கலந்துகொண்டார். தன் சுற்றுப் பயணத்தின் பகுதி நிகழ்வுகளாக அவர் பல்வேறுபட்ட சந்திப்புகளையும் மேற்கொண்டு வருகின்றார். இதன் தொடர்ச்சியாகவே அவர் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சீனாவின் போர்க்கப்பல் இலங்கையில் கடல்சார் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இதனால், இலங்கையின் துறைமுகங்களில் சீனா ஆதிக்கம் செலுத்த எத்தனிக்கின்றதா? என்று சர்வதேச ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டிருந்தன. இது இந்தியாவின் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று இந்திய அரசியல் கட்சிகளில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. இந்த நிலையிலேயே கேந்திர முக்கியத்துவம் மிகுந்த திருகோணமலைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார் இந்திய நிதி அமைச்சர்.

திருகோணமலை, திருக்கோணேஸ்வரத்துக்கு பயணம் மேற்கொண்டு அங்கு அவர் வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன் போது, திருக்கோணேஸ்வரத்தையும் திருக்கேதீஸ்வரம் போன்று இந்தியா பொறுப்பேற்று முழுமையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்தார். அதைச் சாதகமாகப் பரிசீலிப்பதாக நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். (அ-ம-150)

### தமிழ்...

களமிறங்கினார்கள். நேற்றுக் காலை கிழக்குப் பல்கலைக்கழக முன்றிலில் ஒன்று கூடிய மாணவர்கள் கோஷங்களை எழுப்பியவாறும், பதாகைகளை ஏந்தியவாறும் பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு ஊர்வலமாக வந்து அவர்களுடன் இணைந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இனவாதத்தைக் கக்கும் அம்பிபிட்டிய தேரரை கைது செய்யவேண்டும், காவி உடை கொண்டு தமிழர்களை அடக்கக் கூடாது, பண்ணையாளர்களை வதைக்க அரசு அனுமதிக்கக்கூடாது, மேய்ச்சல் தரைகளில் முன்னெடுக்கப்படும் சிங்களக் காடையர்களின் ஆக்கிரமிப்புக் கைவிடப்படவேண்டும் உள்ளிட்ட வலியுறுத்தல்களை அவர்கள் முன்வைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் உள்ளிட்ட பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-150-100)

### பால்மா...

விலை 948 ரூபா. மேலும் பச்சைப்பயறு மற்றும் கடலை ஆகியவற்றின் விலைகள் நேற்றுமுதல் குறைக்கப்பட்டுள்ளன. ஒரு கிலோகிராம் பச்சைப் பயறு 77 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 998 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ கடலையின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 540 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### மலையக...

முன்னிட்டு 'நாம் 200' நிகழ்ச்சி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் ஜனாதிபதி ரணில் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் நோக்கில் ஆசிரியர் பயிற்சி வழங்கல் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும். இந்திய நிதியுதவியின் கீழ் 4ஆம் கட்டமாக 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான இணைப்புப் பாலமாக மலையகத் தமிழர்கள் திகழ்வர்கள்.

மிகவும் கஷ்டமான சூழலில் நாட்டுக்குப் பெரிய பங்களிப்பை மலையக மக்களாகிய நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். நாடு நலமாக இருக்க பெரும் தொண்டாற்றியிருக்கிறீர்கள். தேயிலை என்றாலே இலங்கை என்ற நிலைக்குக் கொண்டு வந்துள்ளீர்கள். தமிழ் மக்களின் வளர்ச்சியும் நல்வளர்ச்சியாக அமையவேண்டும் - என்றார்.

நிகழ்வில், மகா சங்கத்தினர் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அலி சப்ரி, மஹிந்த அமரவீர, பந்துல குணவர்த்தன, மனுஷ நாணயக்கார, லசந்த அழகியவன்ன ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், துமிந்த திஸாநாயக்க, நிமல் லன்சா, எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம)

### யாழ்...

பாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்யவுள்ள இந்தக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்டச் செயலர் மற்றும் யாழ். மாநகரசபை ஆணையாளர் ஆகியோருடன் உத்தியோகபூர்வ சந்திப்புகளை மேற்கொள்ளவிருப்பதுடன், சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நலனோம்புத் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

இதேநேரம், புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு மாதாந்தம் ரூபா 6 ஆயிரத்து 500 படி வழங்குவதற்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சீனத் தூதுவரின் யாழ்ப்பாணப் பயணத்துக்கான நிகழ்ச்சி நிரலில் யாழ். பல்கலைக்கழக பயணம் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-20)

### வவுனியாப்...

ஆறு அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு பூராகவும் உள்ள பல்கலைக்கழகங்களில் தற்போது போராட்டங்கள், பேரணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே வவுனியாப் பல்கலைக்கழகத்திலும் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஊழியர்களுக்கு 40 வீதமான ஊதிய உயர்வு கிடைக்க வழிசெய்யவேண்டும், அனைத்துப் பிரிவுகளுக்கும் ஒரே நேரத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும், ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதிக்கு விதிக்கப்பட்ட வரிகளை திரும்பப்பெற வேண்டும், பல்கலைக்கழக கல்விசாரா பணியிடங்களை உடனடியாக நிரப்பவேண்டும், தேசியப் பல்கலைக்கழக அமைப்பை பாதுகாக்க, பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள இழப்பைத் தடுக்க வழி செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-110)

### டிசெம்பர்...

சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

36 ஆண்டுகளில் செய்யத் தவறிய பணியை ஒன்றரை ஆண்டுகளில் மேற்கொண்டு வருகிறோம். மேலும், வடமத்திய மற்றும் வடமாகாணங்கள் தற்போது வீதிகளை அடையாளம் கண்டு, பட்டியலிடும் பணியை முடித்துள்ளன. டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை முழுமைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதர மாகாணங்களில் 2024ஆம் ஆண்டில் பணிகள் முன்னெடுக்கப்படும்.

உலக வங்கியின் ஆதரவின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்டத்தின் மூலம் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் கல்வித் துறைக்கு ஒன்பது பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். சுகாதாரத்துறைக்கு 4 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா வழங்கப்படும். அடுத்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் அந்தந்த மாகாணங்களின் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் இந்தத் திட்டம் 6 மாதங்களுக்குள் நிறைவடையும். அத்துடன் மாகாணசபைகளுக்கு உட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற வகையில் பணியாற்றும் 8 ஆயிரத்து 400 ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இந்த நியமனங்கள் வழங்கப்படும் - என்றார். (அ-ம-26)

### ராபா எல்லை...

இலங்கையர்களும் மீட்கப்பட்டுள்ளனர். இஸ்ரேலில் இருந்த ஒரு இலங்கையர் போரில் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் ஒருவர் பணயக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளார் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (அ-ம-44)

### வரியால்...

அதிகரிப்புகள் இடம்பெறவுள்ளன. எனவே, மக்களை வதைக்கும் இந்த அரசுக்கு மக்கள் அணிதிரளவேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வதேசத் தொடர்பு உள்ளது, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பார் எனக்கூறியே பெரமுனவினர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆக்கினர். ஆனால், வெளிநாட்டுக் கடன் சுமை அவ்வாறே உள்ளது. ஒரு டொலரேனும் கழிக்கப்படவில்லை. அத்துடன், மக்கள் வாழ முடியாத அளவுக்கு பொருளாதார நிலை காணப்படுகின்றது.

மின் கட்டணம் அதிகரித்துள்ளது, எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. வரவு - செலவுத் திட்டம் ஊடாக சொத்து வரி உட்பட மக்களை சுரண்டும் வகையில் வரி விதிப்பு யோசனைகள் வரவுள்ளன. 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வரிக்கோப்பு திறக்கப்படவுள்ளது. இவ்வாறு மக்கள்மீது மென்மேலும் சுமைகளைத் திணிக்கும் வகையிலான ஏற்பாடுகளே இடம்பெற்றுவருகின்றன.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான பொறிமுறை இந்த அரசிடம் இல்லை. மாறாக சர்வதேச நாணய நிதியத்தைநாடி, அந்த நிதியம் கூறும் தாளத்துக்கேற்ப ஆட்சியாளர்கள் ஆடுகின்றனர். மக்கள் பக்கம்நின்று சிந்திக்காது, சர்வதேச நாணய நிதியத்தின் யோசனையின் பிரகாரம் எல்லாவிதத்திலும் வரி அறிவிடப்படுகின்றது' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டாரிக்குளம் வீதியை புனரமைத்துத் தாருங்கள்

## அந்தப் பகுதி மக்கள் போராட்டம்

வவுனியா பண்டாரிக்குளம் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கவனவீர்ப்புப் பேரணியில் ஈடுபட்டனர். வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக்கல்லூரி முன்பாக ஆரம்பமான இந்த கவனவீர்ப்புப்பேரணி பண்டாரிக்குளம் பிரதான வீதியூடாக ஊர்வலமாகச் சென்று புகையிரத நிலைய பிரதான வீதியைச் சென்றடைந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவிக்கையில், பல வருடங்களாக புனரமைப்பின்றி யுள்ள இந்த வீதியால் பயணிப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. மழைகாலங்களில் இந்த வீதியால் பயணிக்கவே முடியாத நிலை உருவாகியுள்ளது. பாடசாலை மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்தே இந்த வீதியூடாக பயணிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி இந்த வீதியைப் புனரமைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-18)




**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் வெளிநாட்டவர்கள் தங்கும் விடுதி ஒன்றிற்கு கணினி அறிவு மற்றும் ஆங்கில அறிவு உள்ள ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

076 429 3040
076 131 3000

**0+ குருதி அவசரம் தேவை**

வழங்கக் கூடியவர்கள் தயவுசெய்து பின்வரும் இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

077 025 7098
077 057 9552

**களஞ்சிய வசதியுடன் கூடிய காணி விற்பனைக்கு உள்ளது**

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100m தூரத்தில் அமைந்துள்ள 5 ¼ பரப்பு காணி பாரிய களஞ்சிய வசதியுடன் விற்பனைக்கு உள்ளது.

077 386 6250 CS 52707 (AK.1)

**02 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன**

அமெரிக்க லொத்தர் இலவச விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024ல் நீங்களும் அமெரிக்காவில்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

V2 Travels

0768226244
0768226241

**சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய மின்சாதன பவர்ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், றமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (04.11.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு இச்சேவை ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும் இடம்பெறும் மேலும் எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளலாம்.

வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்.

ஆர்க் என்ரபிறைசஸ் 021 228 2020 (CS52692) (AK.1) A9. வீதி. பரந்தன் சந்தி. 071 535 7800


**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 06.10.2023 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி

**வானதி பரமேஸ்வரன்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (03.11.2022) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் (05.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்று தொடர்ந்து இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியசுவாமி மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (CS 52695) (AK.1)

கந்தசுவாமி கோவிலடி, இணுவில் மேற்கு, இணுவில். குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 19 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும், 3 1/2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.

திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.

- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389
077 986 5457

(CS 26789) A-1


# மரண அறிவித்தல்

மலர்வு 02 . 10 . 1939



உதிர்வு 31 . 10 . 2023

**திருமதி துரைச்சாமி இராசம்மா**

குமரகோட்டம், கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைச்சாமி இராசம்மா கடந்த (31.10.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா முத்துக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைச்சாமியின் மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதியின் சகோதரியும், சத்திமூர்த்தி, பத்மினிதேவி, சபாநாயகம் (ரவி-லண்டன்), காலஞ்சென்ற கிருபாகரமூர்த்தி மற்றும் ஜெயமூர்த்தி (பிரான்ஸ்), ஜெயசீலன் (பிரான்ஸ்), கவிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராணி, செந்தில்நாதன், ரூபமலர் (லண்டன்), சிவகாந்தினி (பிரான்ஸ்), சுபாஜினி (பிரான்ஸ்), பாக்கியநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், உமாகாந்தன் - கயாணி, பிரதீபன் - வசந்தரூபி, சயிலா, மகீபன் - தாரணி, வாகீசன் - அருணாதேவி, அகிலா - நிரூபன், சர்மிளா - சிவமகிந்தன், ஜனனி - பிருந்தாபன், கபிலன் - மேனகா, கிருசன் - சுறேகா, மதுசன் - நிறோஜனா, திலீபன், யாழினி, முகிலன், சுதர்சினி - யுகேந்திரன், நிதர்சன், கிருபன், அபிராமி, சுபீட்சனா, கோபினா ஆகியோரின் பேர்த்தியும், ஆருஷி, ரித்வின், கிருத்திகா, சிவனியா, சாருஜன், ஆரணி, ஆருஜன், றியன், லியானா, அபினேஷ், ஜானுஷா, இஷான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குமரகோட்டம், கோண்டாவில்.
0094760581329
0094743325093

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 26787) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.